பாடம் 13

## புதிய பாஸ்காத் திருவிழா

யூதர்களின் பாஸ்காத் திருவிழாவைப் பற்றி நீங்கள் முன்னொரு பாடத்தில் கற்றுக் கொண்டவைகளைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

அன்று ஒரு வியாழக்கிழமை. பாஸ்கா உணவை அருந்த வேண்டிய நேரம் வந்து விட்டதனால் இயேசுநாதர் தம்முடைய சீடர்களுடன் பந்தியமர்ந்தார்.

யூதர்களின் முறைப்படி விருந்து உபசரணையில் கலந்து கொள்ளுபவர்களுடைய கால்களைக் கழுவும் வழக்கம் இருந்தது. அதனை விருந்திற்கு அழைப்பவர் தம்முடைய அடிமையைக் கொண்டு செய்விப்பார். ஆனால் இயேசு விருந்து உபசரணையை ஒழுங்கு செய்த வீட்டில், தானே தம்முடைய சீடர்களின் பாதங்களைக் கழுவுவதற்கு ஆயத்தமானார்.

இயேசு எவ்வளவு பெரியவராக இருந்தும், அடிமைகள் செய்யும் பணியைச் செய்யும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்திக் கொண்டதைக் கண்ட சீடர்கள், தங்களுக்குள் அவரைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள்.

இயேசு பேதுருவின் கால்களைக் கழுவ முயற்சிக்கும் போது அவர், **“நீரோ என் பாதங்களைக் கழுவுவது”** என்று கேட்டார். அதற்கு இயேசு **“நான் உன் பாதங்களைக் கழுவாவிடில் உனக்கு என்னோடு பங்கில்லை என்றார்.”**



அப்போது பேதுரு, **"ஆண்டவரே, என்னுடைய பாதங்களை மட்டுமல்ல, என்னுடைய தலையையும் கழுவும் என்றார்."** திருமுழுக்குப் பெற்ற நீர் முழுமையாகத் தூய்மையாய் இருக்கிறீர். ஆனபடியால், பாதங்களை மட்டும் கழுவினால் போதுமானது என்றார்.

தம்முடைய சீடர்கள் அனைவரதும் பாதங்களைக் கழுவி முடித்த பின்னர், இயேசுநாதர் அவர்களுடன் உணவு அருந்துவதற்காக அமர்ந்தார்.

அவர் தமது சீடர்களை அன்புடன் நோக்கி, **"நான் பாடுபடுவதற்கு முன்னர் இந்தப் பாஸ்கா உணவை உங்களோடு உண்ணுவதற்கு மிகவும் ஆவலாக இருந்தேன்."** என்று கூறினார்.



பின்னர் இயேசு அப்பத்தை எடுத்து, அதை ஆசீர்வதித்து அதைப் பிட்டுத் தமது சீடர்களுக்குக் கொடுத்து. **"இதை வாங்கி உண்ணுங்கள். இது என் சரீரம்"** என்று கூறினார். அவ்வாறே திராட்சை இரசக் கிண்ணத்தைக் கையிலெடுத்து, நன்றி கூறிச் சீடர்களுக்குக் கொடுத்து, **"நீங்கள் அனைவரும் இதில் பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புக்காக உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படப் போகின்ற என் உடன்படிக்கையின் இரத்தமாகும்"** என்று கூறினார்.

இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் பெரிய வியாழக்கிழமை இந்தப் புதிய பாஸ்கா விழாவைக் கொண்டாடுகிறோம். இதனை நாம் தேவநற்கருணை விழாவாகக் கொண்டாடுகிறோம்.

ஒவ்வொரு திருப்பலியின் போதும் இயேசுநாதர் தமது கடைசி இராப்போசனத்தின் போது நடத்திய சம்பவம் ஞாபகமூட்டப்படுகிறது. **"என் நினைவாக இதைச் செய்யுங்கள்".** என்ற வார்த்தையின் வழியாகக் குருவானவர், நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்காக எம்மை அர்ப்பணிக்க வேண்டும் என ஞாபகப்படுத்துகிறார்.

எனவே நாம் இயேசுவைப் போல் தாழ்மை உடையவர்களாகவும் மற்றவர்களுடைய தேவைகளின் போது உதவி செய்யவும் முயற்சிக்க வேண்டும். நாம் இப்போது கஷ்டப்பட்டுப் படித்துப் பின்னர், நமது பெற்றோருக்கும், நாட்டிற்கும் சேவை செய்ய முயற்சி செய்வோம்.

**ஒப்படை**

கீழே தரப்படும் வசனங்கள் சரி ஆயின் " (√) " என்றும் பிழையாயின் " (X) " என்றும் அடையாளமிடுங்கள்.

(1) 1. இயேசு பெரிய வியாழக்கிழமை தேவநற்கருணையை ஏற்படுத்தினார். ...........

2. இயேசுநாதர் பேதுருவின் பாதங்களை மட்டும் கழுவினார்.

..........

3. நான் உயிர்த்தெழு முன்னர் இந்தப் பாஸ்கா உணவை உங்களுடன் உண்பதற்கு மிகவும் ஆசையாயிருந்தேன் என்று இயேசு கூறினார். ............

4. நாமும் இயேசுவைப் போல் மற்றவர்களுக்காக எம்மை அர்ப்பணிக்க வேண்டும். ..............

5. யூத முறைப்படி வீட்டிற்கு வரும் விருந்தினர்களின் பாதங்களை வீட்டுத் தலைவன் கழுவ வேண்டும்.............

(2) **பேதுரு "ஆண்டவரே என்னுடைய பாதங்களை மட்டுமல்ல, என்னுடைய தலையையும் க்ழுவும்"** என்று கூறியது ஏன்?